| | |
|---|---|
| மையம் : ______________ | பெயர்: ______________ |
| மேற்பார்வையாளர் கையொப்பம்: ______________ | பதிவு எண்: ______________ |
| | நாள் : ______________ |

# தமிழ் இணையக் கல்விக்கழகம்

## சான்றிதழ்க் கல்வி

## **BA00** மேல்நிலை

### எழுத்துத் தேர்வு - மே-சூன், 2017

நேரம் : 1.30 மணி | மதிப்பெண் : 50
Time : 1.30 hrs. | Total Marks : 50

### பகுதி - 1

**I.** **பின்வரும் உரைநடைப் பகுதியைப் படித்துவிட்டு அதன் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு ஒரு வரியில் விடை தருக.**
Read the following text and answer the questions given below in a single line.
**(5x1=5)**

"நான் ஒரு வெளிப்படையான சாதாரணமான பெண். நட்புணர்வுடன் பழகவே விரும்புகிறேன்." "அனைவருடனும் சதுரங்க விளையாட்டில் மட்டுமல்லாது வாழ்க்கையிலும் ஒழுக்கத்தைக் கடைப்பிடிப்பது மிக அவசியம். கடின உழைப்பும் சரியான ஆதரவும் இருந்தால் யாரும் நல்ல ஒரு சதுரங்க வீரராக உயர்வது நிச்சயம். விளையாட்டில் விட்டுக் கொடுப்பது என்ற பேச்சுக்கே இடமில்லை."

**வினாக்கள் :**

1. நல்ல சதுரங்க வீரராக வருவதற்கு எது தேவை?

______________________________

2. விஜயலட்சுமி எப்படிப்பட்ட பெண்?

______________________________

3. விளையாட்டில் எதற்கு இடமில்லை?

___________________________________________

4. விளையாட்டிலும் வாழ்க்கையிலும் எதைக் கடைபிடிக்க வேண்டும்?

___________________________________________

5. அனைவரிடமும் விஜயலட்சுமி எவ்வாறு பழக விரும்புகிறார்?

___________________________________________

**II. பின்வரும் பாடல் பகுதியைப் படித்துவிட்டு அதன் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு ஒரு வரியில் விடை தருக.**

Read the following poem and answer the questions given below in a single line.

**(5x1=5)**

எவர் உடம்பினிலும் – சிவப்பே
இரத்த நிறமப்பா!
எவர் விழி நீர்க்கும் – உவர்ப்பே
இயற்கைக் குணமப்பா!

பிறப்பினால் எவர்க்கும் – உலகில்
பெருமை வாராதப்பா!
சிறப்பு வேண்டுமெனில் – நல்ல
செய்கை வேண்டுமப்பா!

நன்மை செய்பவரே – உலகம்
நாடும் மேற்குலத்தார்;
தின்மை செய்பவரே – அண்டித்
தீண்ட ஒண்ணாதார்!

வினாக்கள்

1. இரத்தத்தின் நிறம் என்ன?

___________________________________________

2. எவர் விழி நீர்க்கும் சுவை என்ன?

___________________________________________

3. எதனால் பெருமை வராது?

4. சிறப்பு வேண்டுமெனில் என்ன செய்ய வேண்டும்?

5. எதைச் செய்பவரை உலகம் நாடும்?

**III. பின்வரும் சொற்களைப் பொருள் தருமாறு சொற்றொடரில் அமைக்க.**
Form meaningful sentences using the following words. **(5x2=10)**

1. முயற்சி

2. திறமை

3. மனம்

4. பயிற்சிகள்

5. உயர்வு

IV. **பின்வரும் வினாக்களுள் ஐந்து வினாக்களுக்கு மட்டும் சில வரிகளில் விடை தருக.**

Answer any Five of the following questions in a few lines. **(5x4=20)**

1. இறைவாழ்த்துப் பாடலால் அறியலாகும் செய்திகளை எழுதுக.
2. சேய்மைச் சுட்டு என்றால் என்ன? விளக்குக.
3. புத்தரின் மயக்கம் நீக்க சிறுவன் செய்த செயல் யாது?
4. வசந்த சவுந்தரி எவ்வாறு பந்து ஆடினாள்?
5. அப்பா வற்புறுத்திச் சொன்னது என்ன?
6. எண் என்றால் என்ன? எத்தனை வகைப்படும்? அவை யாவை?
7. இரண்டாம் வேற்றுமையை விவரிக்க.
8. சுந்தரம் சிவகாமியிடம் என்ன கூறினார்?
9. எதன் வழியே திருவள்ளுவரின் சிந்தனையின் அடித்தளம் நமக்குப் புரிகிறது?
10. ஹெர்மன் ஹெஸ்லே என்பவர் யார்?

**V** **பின்வரும் பொருள்களுள் ஏதேனும் ஒன்று பற்றிக் கடிதம் எழுதுக.**
Write a letter on any one of the given subjects. **(1x10=10)**

1. "இளம் விஞ்ஞானி" விருது பெற்ற உன் நண்பனைப் பாராட்டி ஒரு கடிதம் எழுதுக.
2. நீ சென்று வந்த சுற்றுலா குறித்து உன் தந்தைக்கு கடிதம் எழுதுக.
3. 'சதுரங்கச் சாதனையாளர்' என்ற தலைப்பில் நீ ஆற்றிய உரை குறித்து உன் தாத்தாவிற்கு கடிதம் எழுதுக.

*****